**செய்தி வெளியீடு எண்: 1040** **நாள்: 27.11.2008**

## இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களின் சீராய்வுக் கூட்டம் நாள் 27.11.08.

**<u>செய்திக் குறிப்பு.</u>**

இந்து சமய அறநிலைய துறை அலுவலர்கள், தத்தம் பிரிவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளின் முன்னேற்றம், செயல்பாடுகள் குறித்த சிறப்பு சீராய்வுக் கூட்டம், சென்னை, ஆணையர் அலுவலகத்தில், 27.11.08 அன்று காலை 10.00 மணி அளவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் **திரு.கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் தலைமையில், முதன்மை செயலர்/ஆணையர் திரு.த.பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசு அறிவிப்புகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், நிலுவையிலுள்ள திட்டங்களை தக்க முறையில் விரைவில் நிறைவேற்றுவதற்கான வழி முறைகள், சுற்றுலாத்துறை மற்றும் அரசு, துறை நிதி உதவிகள் மூலம் பக்தர்கள் வசதிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து சீராய்வு செய்யப்பட்டது. புராதன திருக்கோயில்களின் புனரமைப்பு மற்றும் திருப்பணி, குடமுழுக்குகள், காலக்கெடு நிர்ணயித்து படிப்படியாக விரைந்து நிறைவேற்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் மண்டல இணை ஆணையர்கள், இணை ஆணையர்/செயல் அலுவலர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர்கள், பொறியியல் துறை உயர் அலுவலர்கள், தலைமை தணிக்கை அலுவலர், ஆலய நிலங்கள் தனி அலுவலர், இணை ஆணையர் (தலைமையிடம்), இணை ஆணையர் (திருப்பணி), ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணை ஆணையர் (தலைமையிடம்)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**